# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS. No. 203/2024 நாள்.22.04.2026

## DW3- திரு.ஸ்ரீதர், த/பெ. திரு. ராஜன்

வாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

என்னுடைய மதம் இந்துவா, கிறிஸ்டினா என்றால் கிறிஸ்டின். என் பள்ளி மாற்று சான்று, சாதி சான்று ஆகியவற்றில் என்னுடைய மதம் இந்து என்று உள்ளது என்றால் ஆமாம். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் கிறிஸ்த்துவர் என்று பொய்யான தகவலை சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல அப்பா காலத்திலிருந்து கிறிஸ்வதுராகதான் உள்ளேன். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் 6வது பாராவில் வாதி குடும்ப சொத்துகளில் எந்த புல எண்ணை அடமானம் வைத்தார் என்று சொல்லவில்லை என்றால் எண் சொல்லவில்லை. யாரிடம் கடன் வாங்கினார் என்ற விபரத்தையும் கூறவில்லை என்றால் ஆமாம். மேற்படி கடனை நானும் என் தாயாரும் திரும்ப செலுத்தியதாக சொல்லியுள்ளேனே யாரிடம் எவ்வளவு கடன் திரும்ப செலுத்தினேன் என்று பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் ஆமாம். செங்கிபட்டி காவல்நிலையத்தில் வெளிநாட்டிற்கு ஆள் அனுப்பிய வகையில் ஏமாற்றியதாக சொல்லி வந்த புகார்களுக்கு யார் யாருக்கு எவ்வளவு பணம் கொடுத்தேன் என்று குறிப்பாக அதில் சொல்லவில்லை என்றால் ஆமாம். நானும் என் தாயாரும் எந்த புல எண் சொத்தை விற்றோம் எந்த மனையை அடமானம் வைத்தோம் என்று பிரமாணவாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ஆமாம். என் அப்பா உயிருடன் இருக்கும்போது வாதி குடும்ப சொத்தை அழித்ததாக சொல்லியுள்ளேனே எந்த சொத்தை அழித்தார் என்று புல எண் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. எந்த வருடத்தில் வாதி குடும்ப சொத்தை பாகம் பிரித்தார் கேட்டார் என்று வருடம் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. வாதி பாகத்திற்காக நடுகாவேரியில் 7மா நிலமும், நடுபடுகையில் 10மா நிலமும் வாதிக்கு கொடுக்கபட்டதாக சொல்லுகிறேனே அந்த புல எண்களை பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எந்த சொத்தை விற்றார் என்று ஆதாரம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நடுகாவேரி நிலத்தை உலகப்பநாட்டார் மகன் செந்தில்குமாருக்கு விற்றார் என்று சொல்லிவிட்டு கிரையம் செய்து கொடுக்கவில்லை என்று சொல்லுகிறேனே அது முற்றிலும் பொய் என்றால் சரியல்ல. வாதி எந்த சொத்தையும் உலகப்பநாட்டார் மகன் செந்தில்குமாருக்கு விற்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நடுபடுகை கிராமத்தில் தனபால் மனைவி இந்திராவுக்கு விற்ற

சொத்தில் யார் யார் கையெழுத்து போட்டோம் என்றால் ராஜா, நான், என் அக்கா, என் தாயார். அவ்வாறு விற்ற பணத்தை என் தாயாரும் நானும் வாங்கிகொண்டோம் என்றால் சரியல்ல. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் 8வது பாராவில் 5.9.2006இல் நல்லநிலையிலிருந்தபோது என் அப்பா ஒரு உயில் எழுதி வைத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். பி.சா.ஆ.1 ஆவணத்தில் எனது அப்பா அவருக்கு உடல்நிலைசரியில்லை என்றும், அடிக்கடி மயக்கம், கிறுகிறுப்பு, தலைசுற்றல் போன்ற இயற்கை உபாதைகள் உள்ளது என்று சொல்லியுள்ளார் என்றால் ஆமாம். பி.சா.ஆ. 1ஆவணம் என்து தந்தையாரால் நல்லநிலையில் எழுதிகொடுக்கப்படவில்லை என்றும், நான் கட்டாயபடுத்தி எழுதி வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய முழுபெயர் என்ன என்றால் ஸ்ரீதர். என் அப்பா ஸ்ரீதரனுக்கு உயில் எழுதியுள்ளார் என்றால் ஆமாம் அது நான்தான். என் தகப்பனார் காலத்திற்கு பிறகுதான் வாதியின் பாகம் பிரித்துகொடுக்கபட்டதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பி.சா.ஆ.8, 9 வீட்டுவரி ரசீது, குடிநீர் வரி ரசீது 2024 வருடத்திற்குரியது என்றால் ஆமாம். அதற்கு முன்புவரை என் அப்பா பெயரிலிருந்தது என்றால் ஆமாம். பி.சா.ஆ.6 தெய்மலரிடம் வாதிதான் அடமானம் வைத்தார் என்றால் ஆமாம். பி.சா.ஆ.11 ரசீதில் சாட்சி கையெழுத்து இல்லை என்றால் அதில் இரண்டு ஆவணங்கள் உள்ளது ஒன்றில் சாட்சி கையெழுத்தில்லை மற்றொன்றில் தயார் செய்தவர் கையெழுத்தில்லை. பி.சா.ஆ. 7 ஒத்தி பத்திரம் வாதி ஏற்படுத்தினார் என்றால் ஆமாம் அதை நான்தான் திருப்பினேன். தஞ்சாவூர் வீட்டை நான் அகம் பைனான்சில் அடமானம் வைத்து போக்கியத்திலிருந்து திருப்பினேன் என்றால் ஆமாம். இன்றையதேதி வரை தஞ்சாவூரிலுள்ள வீட்டில்தான் வாதி குடியிருக்கிறார் என்றால் ஆமாம். தஞ்சாவூரில் உள்ள வீடு சம்மந்தமாக 2020இல் ஒரு முன்ஜாக்கிரதை மனு தாக்கல் செய்தேன் என்றால் ஆமாம். வாதிக்கு வழக்கிடை சொத்தில் இந்த சட்டபடி பாகம் கிடைக்ககூடியது என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

NAGARAJAN Digitally signed by NAGARAJAN Date: 2026.04.22 15:55:42 +0530

2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.